# கதாமணிமாலை

முதல் புஸ்தகம்

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்
கலாசாலைத் தமிழ்ப் புலவராகிய
**எஸ். எஸ். அருணகிரிநாதர்**
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[24-5-'27 கெஜட் 72-ம் பக்கம் பார்க்க]

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1935

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 2½ அணா

# முன்னுரை

இச் சிறு புத்தகத்தை, ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணவர்களுக் கென்று எழுதினேன். அம் மாணவர்களுக்கு ஏற்றவாறு விஷயத்தையும், தமிழ் நடையையும் அமைத்து, இப் புத்தகத்தை எழுதியிருக்கிறேனென்பது இதை ஒரு முறை உற்று நோக்குவார்க்கு விளங்காமற் போகாது. இதை, ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஏற்றுத் தங்கள் மாணவர்களுக்கு உதவுவார்களென்று நம்புகிறேன்.

எஸ். எஸ். அருணகிரிநாதன்.

# உள்ளுறை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | நல்ல பிள்ளை | 5 |
| 2. | கண்ணப்பன் | 7 |
| 3. | கர்வம் உள்ள குடியானவன் | 10 |
| 4. | இரண்டு பிள்ளைகள் | 11 |
| 5. | பொய் பேசாத பிள்ளை | 15 |
| 6. | சோம்பல் கூடாது | 17 |
| 7. | நல்ல குடியானவன் | 20 |
| 8. | புத்தி இல்லாத கிளி | 22 |
| 9. | நாய் நல்ல துணை | 23 |
| 10. | இரகசியத்தைச் சொல்லாதே | 26 |
| 11. | திருடாதே | 27 |
| 12. | வேலனும், இடும்பனும் | 29 |
| 13. | அண்ணனும், தம்பியும் | 31 |
| 14. | தருமன் | 33 |
| 15. | வேடனும் நாயும் | 35 |
| 16. | அகங்காரம் உள்ள அரசன் | 37 |



குரு பக்தி

# கதாமணிமாலை

(முதல் புஸ்தகம்)

## 1. நல்ல பிள்ளை

ஓர் ஊரில் ஒரு கிழவனும், கிழவியும் இருந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவன் பெயர் முத்து ; இளையவன் பெயர் முனியன்.

அவர்கள் இருந்த ஊருக்குப் பக்கத்து ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவர் ஒரு பெரிய கோவில் கட்டினார். கோவிலில் திருவிழா நடந்தது. அதைப் பார்க்க அநேகர் போனார்கள்.

அப்போது அந்தக் கிழவனும், கிழவியும் அந்தத் திருவிழாவைப் பார்க்க ஆசைப்பட்டனர்.

ஆனால், அவர்களால் நடக்கவேமுடியாது. அதனால் அவர்கள் முத்துவையும், முனியனையும் பார்த்து, 'பிள்ளைகளே! நீங்கள் எங்களையும் அத் திருவிழாவுக்கு எப்படியாவது அழைத்துக் கொண்டு போக வேண்டும்' என்றார்கள்.

அதற்கு முனியன், 'ஓ! உங்களுக்கு வேலை இல்லையோ! என்னால் உங்களை அழைத்துக் கொண்டுபோக முடியாது' என்று சொல்லிப்போய் விட்டான்.

ஆனால், மூத்தவனான முத்து அப்படிச் சொல்லவே இல்லை. அவன் தன்னுடைய தகப்பனாரையும் தாயாரையும் பார்த்து, 'என்னைப் பெற்றவர்களே! நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நீங்கள்தாமே எனக்கு முதல் தெய்வம்! உங்களை இங்கே விட்டு, நான் மாத்திரம் திருவிழாவுக்குப் போனால், எனக்குச் சுவாமி நன்மை செய்வாரா? ஆகையால் நான் உங்களை எப்படியாவது திருவிழாவுக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்' என்று சொன்னான்.

பிறகு, அவன் பலமான மூங்கில் ஒன்று கொண்டு வந்தான். அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தொட்டில்கள் கட்டினான். ஒரு தொட்டிலில் தன் தாயாரையும், இன்னும் ஒரு தொட்டிலில் தகப்பனாரையும் உட்காரவைத்தான். பிறகு, அவர்களைத் தூக்கிக் கொண்டு பக்கத்து ஊரில்

உள்ள கோவிலில் நடக்கும் திருவிழாவுக்குப் போனுன்.

கோவிலில் இருந்த ஜனங்கள், முத்துவின் நல்ல குணத்தைக் கண்டு, சந்தோஷப் பட்டார்கள். கோவில் கட்டின பணக்காரர் முத்துவின் நல்ல குணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டார். உடனே அந்தப் பணக்காரர் முத்துவைக் கூப்பிட்டு அவனுக்கு நூறு ரூபா இனம் கொடுத்தார். அந்தப் பணக்காரர் உதவியால், முத்துவும், அவன் தாயாரும் தகப்பனுரும் சுவாமியை நன்ருய்ப் பார்த்து விட்டு ஊருக்குத் திரும்பினுர்கள்.

முதலில், அந்தத் திருவிழாவைப் பார்க்கப் போன முனியன் அங்கு எதையோ திருடிவிட்டான். அவனைப் போலீஸ் சேவகர்கள் பிடித்துக் கொண்டு போனுர்கள்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

## 2. கண்ணப்பன்

கண்ணப்பன் என்னும் ஒரு பையன் ஓர் ஊரில் இருந்தான். அந்த ஊரில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. கண்ணப்பன் அந்தக் கோவி

லுக்குத் தினந்தினம் தவருமல் போய், சுவாமி யைக் கும்பிட்டுக்கொண்டு வருவான்.

அவன், வழக்கம்போல் ஒருநாள் அந்தப் பிள்ளையார் கோவிலுக்குப் போஞன். அங்கே சில சிறுவர்கள் கண் மூடி ஆட்டம் ஆடிக் கொண்டு இருந்தார்கள். அந்தப் பிள்ளைகள் கண்



ணப்பனையும் விளையாடக் கூப்பிட்டார்கள். அதற்கு அவன், 'எனக்கு விளையாட இஷ்டம் இல்லை' என்று சொல்லிவிட்டுக் கோவிலுக்குப் போஞன்.

கோவிலுக்குப் போன கண்ணப்பன் சுவாமி யைக் கும்பிட்டுக்கொண்டு இருந்தான். அப்

போது, ஒரு பல்லி அவன் முதுகில் குதித்துக் கீழே விழுந்தது. முதுகில் விழுந்த பல்லியைக் கண்ணப்பன் திரும்பிப் பார்த்தான்.

அப்போது ஒரு நல்ல பாம்பு அவனைக் கடிக்க அவன் பின்னால் வந்தது. அதை அவன் பார்த்தான். உடனே அவன் பயந்து, பிள்ளை யாரின் பின்னால் மறைந்து வீட்டிற்கு ஓடினான்.

தன் தகப்பனார் இடம் கண்ணப்பன் தன் மேல் பல்லி விழுந்ததையும், தன்னைப் பாம்பு கடிக்க வந்ததையும் சொன்னான்.

அப்போது அவன் தகப்பனார் அவனைப் பார்த்து, 'கண்ணப்பா! நீ தினந்தினம் கோவி லுக்குச் சென்று சுவாமியைக் கும்பிடுகிறாய் அல் லவா? அதனால், சுவாமிதான் உன்னை அந்தப் பாம்பு கடிக்காதபடி செய்தார். கோவிலுக்குச் சென்று சுவாமியைக் கும்பிடுவதால் எவ்வளவு நன்மை இருக்கிறது பார்த்தாயா!' என்று சொன்னார்.

கண்ணப்பன் அதைக் கேட்டுச் சந்தோஷப் பட்டான்.

"தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்"

# 3. கர்வம் உள்ள குடியானவன்

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் பெரும் பணக்காரன். அதனால் அவனுக்கு அதிக கர்வம் உண்டாயிற்று. அவன் ஒருவரையும் மதிக்கமாட்டான். எல்லோரையும் தன் இஷ்டம்போல் திட்டுவான். அதனால் அவன் எல்லோருக்கும் பொல்லாதவன் ஆனான்.

ஒருநாள் பாதிராத்திரியில் அந்தப் பணக்காரன் வீட்டுக்குப் பத்துப் பேர் திருடர்கள் வந்தார்கள். அவர்கள் அந்தப் பணக்காரனைப் பிடித்து, ஒரு தூணில் கட்டினார்கள். அப்போது அந்தப் பணக்காரன், 'ஐயோ, திருடர்கள், திருடர்கள்!' என்று கூவினான். அவன், ஊரில் உள்ள எல்லோருக்கும் பொல்லாதவன் அல்லவா? அதனால், அவனுக்கு ஒருவரும் வந்து உதவி செய்ய இல்லை.

திருடர்கள் அவனுடைய பணப் பெட்டியை உடைத்தார்கள். அதில் இருந்த ரூபாக்களையும், நகைகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள்.

அதன் பிறகு அந்தப் பணக்காரனுக்குப் புத்தி வந்தது. அவன், 'ஐயோ! நான் ஊராரை விரோதம் செய்துகொண்டேன். ஆகையால் அவர்கள் வந்து எனக்கு உதவி செய்ய இல்லை. இப்போது என்னுடைய ரூபாக்களையும், நகைகளையும் திரு

டார்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டார்களே, இனிமேல் நான் என்ன செய்வேன்!' என்று அவன் வருத்தப்பட்டுக் கொஞ்சம் நாளில் செத்துப்போனான்.

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"

# 4. இரண்டு பிள்ளைகள்

ஒரு வியாபாரிக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அந்தப் பிள்ளைகளில் அண்ணன் பெயர் இராமன்; தம்பியின் பெயர் சுப்பன். அந்த இரண்டு பிள்ளைகளில் சுப்பன் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகமாட்டான். வீட்டில் இருந்து, 'பள்ளிக்கூடம் போகிறேன்' என்று புறப்படுவான். ஆனால் பள்ளிக்கூடம் போகமாட்டான். வழியில் எங்கேயாவது ஒரு செடி இருந்தால் அதில் ஒளிந்து கொள்ளுவான். சில சமயத்தில் உபாத்தியாயர் அவனைக் கண்டுபிடித்து நன்றாய் அடித்துப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுபோவார்.

அதனால் சுப்பனுடைய தகப்பனார் ஒரு உபாத்தியாயரை, வீட்டில் வந்து சுப்பனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். ஆனால்

சுப்பன் என்ன செய்வான் தெரியுமா? உபாத்தி யாயர் தன் வீட்டிற்கு வரும் சமயம் பார்த்து எங்கேயாவது போய்விடுவான்.

சுப்பனுடைய அண்ணன் பெயர் இராமன் அல்லவா? இராமன் நல்ல பிள்ளை. அவன் 'உபாத்தியாயர் வருகிறார' என்று வீட்டுத் திண் ணையின்மேல் இருந்து பார்த்துக்கொண்டே இருப்



பான். உபாத்தியாயர் வந்ததும் அவர் இடம் பாடங்களைக் கேட்டு நன்றாய்ப் படிப்பான். தினந் தினம் தவறாமல் பள்ளிக்கூடத்திற்குப் போய் வருவான்.

அதனால் இராமன் படிப்பில் கெட்டிக்காரன் ஆனான். படிக்காத சுப்பன் ஒன்றும் தெரியாத முழு மூடனாய் விட்டான். அப்போது அவர்கள் தகப்பனாருக்கு வியாபாரத்தில் அதிக நஷ்டம் வந்தது. அதனால் அவருக்கு அதிக வருத்தம் உண்டாய்விட்டது. கொஞ்சம் நாளில் அவர் உடம்பு இளைத்துச் செத்துப்போனார்.

பிறகு, கொஞ்சம் நாளில் சுப்பனுக்கும், இராமனுக்கும் சாப்பிடக்கூடப் பணம் இல்லாமல் போயிற்று. அதனால் சுப்பன் ஒரு தேசத்திற்கும், இராமன் ஒரு தேசத்திற்கும் பிழைக்கப் போனார்கள்.

போன இடத்தில் சுப்பனுக்கு ஒரு வேலையும் அகப்பட இல்லை. படிக்காதவனுக்கு யார் வேலை கொடுப்பார்கள் ? கூலி வேலை செய்யவும் அவனால் முடிய இல்லை. அதனால் அவன் திருட ஆரம்பித்தான். ஒரு நாள் அவன் ஒரு கடையில் திருடும்போது ஒரு போலீஸ்காரன் பார்த்துப் பிடித்துக் கொண்டான். அப்போது சுப்பன், 'ஐயோ, நான் படிக்காமல் இருந்ததால்தானே எனக்கு இப்போது இவ்வளவு கஷ்டம் வந்தது' என்று அழுதுகொண்டே போலீஸ்காரனோடு போனான்.

இராமன் ஒரு தேசத்திற்குப் போனது நமக்குத் தெரியுமே ! அவன் அங்கே போனதும்



ஒரு வியாபாரி இடம் ஒரு வேலை கேட்டான். அந்த வியாபாரி, இராமன் படித்தவன் என்று தெரிந்துகொண்டு அவனுக்கு ஒரு வேலை கொடுத்தான்.

இராமன் அந்த வேலையை நன்றாய்ச் செய்து வந்தான். அதனால் அந்த வியாபாரிக்கு இராமன் இடம் அதிகப் பிரியம் உண்டாயிற்று. அந்த வியாபாரிக்குச் சீதை என்னும் ஒரு பெண் இருந்தாள். அந்த வியாபாரி சீதையை இராமனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தான். அதனால் இராமன் பெரிய பணக்காரன் ஆனான்.

நன்றாய்ப் படித்த இராமன் பணக்காரன் ஆனான். படிக்காத சுப்பன் எப்படி ஆனான் பார்த்தீர்களா!

"வித்தை விரும்பு"

# 5. பொய் பேசாத பிள்ளை

தெற்கே ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்குச் செல்வராஜன் என்னும் ஒரு பிள்ளை இருந்தான். ஒருநாள் ஒரு பெரியவர்

அவர்களுடைய வீட்டுக்கு வந்தார். அவர் செல்வ ராஜனுக்கு ஒரு பேனுகத்தி இனும் கொடுத்தார்.

அதனுல், செல்வராஜன் மிகவும் சந்தோஷப் பட்டான். அவன் அந்தப் பேனுகத்தியை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போனுன். அவன் விளையாடிக்கொண்டே அங்கு இருந்த புஷ்பச் செடிகளைக் கத்தியால் வெட்டிவிட்டான்.

கொஞ்சம் நேரம் ஆனதும் அவன் தகப்பனுர் அங்கு வந்தார். புஷ்பச் செடிகள் துண்டு துண்டாய் வெட்டப்பட்டு இருப்பதைப் பார்த்தார். உடனே அவர் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, 'இந்தப் புஷ்பச் செடிகளை வெட்டினவர்கள் யார்?' என்று கேட்டார்.

வேலைக்காரர்கள், 'எஜமானே, இந்தப் புஷ்பச் செடிகளை வெட்டினவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியாது' என்று பயந்து கொண்டே சொன்னுர்கள்.

அப்போது, செல்வராஜன், 'அப்பா, நான் தான் இந்தப் புஷ்பச் செடிகளைத் தெரியாமல் வெட்டிவிட்டேன். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்' என்று அழுதான்.

அதற்கு அவன் தகப்பனுர், 'மகனே, நீ அழவேண்டாம். நீ இப்போது உண்மை பேசி

யதால் எனக்குச் சந்தோஷமாய் இருக்கிறது. அதுவே போதும். புஷ்பச் செடிகள் போனால் போகட்டும். இப்படியே நீ எப்போதும் உண்மை பேசினால், கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்' என்று சொன்னார்.

செல்வராஜன் எப்போதும் உண்மையே பேசினான். பொய் பேச அவனுக்குத் தெரியாது. அதனால் அவனை எல்லோரும் 'நல்ல பிள்ளை' என்று சொல்லி வந்தார்கள்.

"தக்கோ னெனத்திரி"

# 6, சோம்பல் கூடாது

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு நெல் விளையும் வயல்கள் அதிகமாய் இருந்தன. ஒருநாள் அந்தக் குடியானவன் சாப்பிட்டு ஆனதும் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான்.

அப்போது அவன் தம்பி அங்கே வந்தான். அவன் அந்தக் குடியானவனைப் பார்த்து, 'அண்ணா, களத்தில் நெல்லைச் சேர்த்து வைத்து இருக்கிறேன்' என்று சொன்னான்.

அதற்கு அந்தக் குடியானவன் தன் தம்பியைப் பார்த்து, ‘தம்பீ! நீ வண்டியைக் கொண்டுபோய் களத்தில் இருக்கும் நெல்லைக் கொண்டுவா’ என்று சொன்னான்.



அதற்கு அந்தப் பையன், ‘அண்ணா, எனக்கு இப்போது தலை நோகிறது. நாளைக்குப் போய் எல்லா நெல்லையும் வண்டியில் கொண்டு வருகிறேன்’ என்றான்.

அப்போது அங்கே இருந்த அந்தப் பையனுடைய அண்ணியும், ‘அவசரம் என்ன! அந்த நெல்லை மெதுவாக நாளைக்குக் கொண்டுவரலாம் என்று சொன்னாள்.

ஆனால், அந்தக் குடியானவன் தன்னுடைய தம்பியைப் பார்த்து, 'தம்பீ! நீ அப்படிச் செய்யாதே. என் பேச்சைக் கேள். அதனால் நன்மை உண்டாகும். ஒரு சமயம் இராத்திரிக்கு மழை வந்தாலும் வரும். ஆகையால், நீ உடனே களத்துக்குப் போய் எல்லா நெல்லையும் எடுத்துக் கொண்டுவா' என்று சொன்னான்.

அதைக் கேட்டதும் அந்தப் பையன் உடனே களத்திற்குப் போனான். பிறகு அங்கே இருந்த நெல்லை வீட்டில் கொண்டுவந்து சேர்த்தான்.

பாதி இராத்திரியில் குடியானவன் சொன்னபடியே மழை வந்தது. அந்த மழை சூரியன் புறப்படுகிற மட்டும் பெய்துகொண்டே இருந்தது. அதைக் கண்டதும் அந்தப் பையன் குடியானவனைப் பார்த்து, 'அண்ணா! நீங்கள் சொன்னபடியே மழை வந்துவிட்டதே! நல்ல வேளை! அந்த நெல்லை நான் எடுத்துக்கொண்டு வந்தேன். இல்லாவிட்டால், இப்போது இந்த மழையினால் எல்லா நெல்லும் வெள்ளத்தில் போய் இருக்கும்' என்று சொன்னான்.

உடனே குடியானவன் அந்தப் பையனைப் பார்த்து,'தம்பீ! நீ, இன்றைக்குச் செய்யவேண்டிய வேலையை நாளைக்குச் செய்வோம் என்று சோம்பேறியாய் இருக்கக் கூடாது. எந்த வேலையையும்

செய்ய வேண்டிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும்’ என்று சொன்னான்.

அது முதல் அந்தப் பையன் எந்த வேலையையும் சோம்பல் இல்லாமல் செய்து வந்தான். அதனால் அவனுக்கு அதிக நன்மை உண்டாயிற்று.

“ சோம்பித் திரியேல்”

## 7. நல்ல குடியானவன்

ஒரு காலத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் நன்றாய்ப் படித்தவர். அவர் ஒரு நாள் ஓர் ஊருக்குப் போனார். வழியில் அந்தப் பெரியவருக்குப் பசி அதிகமாய் இருந்தது. அவர் இடத்தில் பணமும் இல்லை. அவர் என்ன செய்வார் பாவம் !

பிறகு அவர் வழியில் இருந்த ஒரு கடைக்குப் போனார். கடைக்காரன் இடம், ‘பசிக்கிறது; கொஞ்சம் அவல் கொடு’ என்று கேட்டார். அவன், ‘கொடுக்கமாட்டேன்’ என்று சொன்னான். வழியில் ஒரு மனிதன் செக்கு ஓட்டிக்கொண்டு இருந்தான். பெரியவர் அவன் இடம் போய், ‘அப்பா, எனக்குப் பசி அதிகமாய் இருக்கிறது. கொஞ்சம் பிண்

ணுக்குக் கொடு' என்று கேட்டார். உடனே அவன், 'பிண்ணுக்கு இல்லை போ' என்று சொன்னான்.

பிறகு அவர் ஒரு வீட்டிற்குப் போனார். அங்கே ஒரு மனிதனைப் பார்த்து, 'ஐயா, தாகம் அதிகமாய் இருக்கிறது. குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்' என்று கேட்டார். அதற்கு அந்த வீட்டுக்காரன் 'வீட்டில் தண்ணீர் இல்லை' என்று சொன்னான்.

பாவம்! அந்தப் பெரியவர் பேசாமல் கொஞ்ச தூரம் நடந்தார். அங்கே ஒரு மரம் இருந்தது. பெரியவர் அந்த மரத்தின் நிழலில் போய்ப் படுத்துக் கொண்டார். அப்போது அங்கே ஒரு குடியானவன் ஏர் உழுதுகொண்டு இருந்தான். அவனுக்கு அவன் பெண்சாதி கஞ்சி கொண்டு வந்தாள். குடியானவன் ஏரை நிறுத்தி விட்டுக் கஞ்சி குடிக்கப் போனான்.

அதை அந்தப் பெரியவர் பார்த்தார். உடனே அவர் அந்தக் குடியானவன் இடம் போய், பசிக்கிறது' என்று சொன்னார். அவனுக்குப் பரிதாபம் உண்டாயிற்று. அந்தப் பெரியவருக்கு வயிறு நிறையக் கஞ்சி ஊற்றினான். மிச்சம் இருந்த கஞ்சியை அவன் குடித்தான்.

பெரியவருக்கு இருந்த பசி போய்விட்டது. அவருக்கு அதிக சந்தோஷம் வந்தது. அவர்

அந்தக் குடியானவனை வாழ்த்தினர். அதனால் அந்தக் குடியானவனுக்குப் பெரிய புதையல் அகப்பட்டது. அதனால் அவன் பணக்காரன் ஆனான். அந்தப் பெரியவர் பெயர் என்ன தெரியுமா? அவர் பெயர் கம்பர்!

"இயல்வது கரவேல்"

# 8. புத்தி இல்லாத கிளி

ஒருமனிதன் ஒருகிளியைப் பிடித்து வளர்த்து வந்தான். அந்தக் கிளி அவன் இடம் நன்றாய்ப் பழகி விட்டது. அதனால் அந்தக் கிளி ஒவ்வொரு நாளும் தனக்கு இஷ்டமான இடத்திற்குப் பறந்து போகும். அது பொழுது போனதும் அந்த மனிதன் இடம் வந்துவிடும்.

ஒரு நாள் அந்தக் கிளி வெளியே பறந்து போயிற்று. வழியில் ஒரு சோளக் கொல்லை இருந்தது. சில காக்கைகள் அந்தக் கொல்லையில் சோளத்தைத் திருடித் தின்றுகொண்டு இருந்தன.

அந்தக் காக்கைகளைக் கிளி பார்த்தது. அது காக்கைகள் இருந்த இடத்திற்குப் போயிற்று. அப்போது அந்தச் சோளக் கொல்லையின் சொந்தக்

காரன் அங்கே வந்தான். அவன் சோளத்தைத் திருடித் தின்னும் காக்கைகளைக் கல்லால் அடித்தான். அந்த அடி அங்கே சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த கிளியின்மேல் பட்டது. அதனால் கிளி செத்துப்போயிற்று. கொல்லைக் காரன் அந்தக் கிளியைத் தூக்கி எல்லோரும் நடக் கிற வழியில் போட்டு விட்டான். அப்போது கிளி யின் சொந்தக்காரன் அந்த வழியே வந்தான். அவன் செத்துப்போன தன் கிளியைப் பார்த்து வருத்தப்பட்டான்.

போகக்கூடாத இடத்திற்குக் கிளி போயிற்று அல்லவா? அதனால் அது செத்துப்போயிற்று. ஆகையால், நாம் துஷ்டர்கள் இருக்கும் இடத் திற்குப் போகக்கூடாது.

''சேரிட மறிந்து சேர்''

# 9. நாய் நல்ல துணை

ஒரு கிராமத்தில் ஒரு கோழியும் இரண்டு நாய்களும் இருந்தன. அந்த நாய்களுக்கும், கோழிக்கும் சிநேகம் உண்டு. ஒரு நாள் அந்தக் கோழி, பக்கத்து ஊருக்குப் போகவேண்டியதாய்



இருந்தது. அது துணைக்கு நாய்களைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போயிற்று.

போகும்போது வழியில் பொழுது போய் விட்டது. அப்போது கோழி, அங்கே இருந்த ஒரு குடிசையின்மேல் பறந்து போய்க் குந்திக் கொண்டது. நாய்கள் அந்தக் குடிசைக்குச் சிறிது தூரத்தில், கீழே தரையில் படுத்துத் தூங்கி விட்டன.

பொழுது விடிகிற நேரம் ஆயிற்று. பொழுது விடியும்போது கோழி கூவும் அல்லவா? அந்த வழக்கம்போல் குடிசையின்மேல் இருந்த கோழி, 'கொக்கரக்கோ' என்று கூவிற்று. கோழி கூவின சத்தம் அந்த வழியே போன ஒரு நரிக்குக் கேட்டது. நரி, கோழியைப் பிடித்துத் தின்னவேண்டும் என்று நினைத்தது. அதனால்' அந்த நரி கோழி இருந்த இடத்திற்கு ஓடிற்று.

அந்த நரியைக் குடிசையின் கீழே இருந்த நாய்கள் பார்த்தன. உடனே அந்த நாய்கள் அந்த நரியின்மேல் பாய்ந்து நரியைக் கடித்துக் கொன்று விட்டன.

கோழிக்கு நாய்கள் நல்ல துணையாய் இருந்தன. அதனால் கோழி நரியின் வாயில் அகப்படாமல் பிழைத்தது. ஆகையால் நாம் எங்கே போனாலும் நல்ல துணையோடு போகவேண்டும். துணை இல்லாமல் தனியேபோனால் ஆபத்து உண்டாகும்.

"துணையோ டல்லது நெடுவழி போகேல்"

# 10. இரகசியத்தைச் சொல்லாதே

ஓர் ஊரில் கிருஷ்ணன், கோவிந்தன் என்னும் இரண்டு மனிதர்கள் இருந்தனர். அவர்கள் இரண்டுபேரும் சிநேகிதர்கள்.

ஒரு சமயம் அந்த ஊரில் திருடர் பயம் அதிகமாய் இருந்தது. அப்போது கோவிந்தன் ஒரு பை நிறைய ரூபா வைத்து இருந்தான். திருடர்களுக்குத் தெரிந்தால் அந்த ரூபாக்களைப் பிடுங்கிக் கொள்ளுவார்கள் என்று கோவிந்தன் நினைத்தான். அதனால் அவன் அந்த ரூபாக்களை ஓர் இடத்தில் குழிதோண்டிப் புதைத்து வைத்தான்.

அந்த இரகசியத்தைக் கோவிந்தன் தன்னுடைய சிநேகிதனாகிய கிருஷ்ணன் இடத்தில் சொன்னான். கிருஷ்ணன் என்ன செய்தான் தெரியுமா? அவன், கோவிந்தன் ரூபாக்களைப் புதைத்து வைத்து இருக்கும் இடத்திற்குப் போனான். கோவிந்தனுக்குத் தெரியாமல் அந்த ரூபாக்களைத் தோண்டி எடுத்துக்கொண்டான். பிறகு அவன் ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போனான். கொஞ்சம் நாள் ஆயிற்று. கோவிந்தன் புதைத்து வைத்த ரூபாக்களைப் போய்ப் பார்த்தான். 'ஐயோ, என் ரூபாக்களை யாரோ எடுத்துக்கொண்டார்களே" என்று அழுதான். பிறகு அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

பணத்தைப் புதைத்து வைத்த இரகசியத்தைக் கோவிந்தன் கிருஷ்ணனுக்குச் சொன்னன் அல்லவா ? அதனால்தானே கோவிந்தனுக்குக் கஷ்டம் வந்தது !

ஆகையால் நாம் இரகசியத்தை ஒருவருக்கும் சொல்லக்கூடாது. சொன்னல் ஆபத்து வரும்.

"உடையது விளம்பேல்"

# 11. திருடாதே

ஒரு மரத்தின் கிளையில் காக்கை ஒன்று கூடு கட்டி இருந்தது. அந்தக் கூட்டில் மூன்று முட்டைகள் இருந்தன.

முட்டைகள் இருந்த மரத்தின் கீழே ஒரு பாம்பு புற்று உண்டு. அந்தப் புற்றில் ஒரு பாம்பு இருந்தது. அந்தப் பாம்பு என்ன செய்தது தெரியுமா ? அது மரத்தில் உள்ள காக்கையின் கூட்டில் இருந்த முட்டைகளைத் திருடித் தின்ன ஆரம்பித்தது.

பாம்பின் செய்கை காக்கைக்குத் தெரிந்தது. காக்கை, பாம்பைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தது. பாம்பைக் கொல்லக் காக்கையால் முடி

யுமா? ஆனால் அந்தக் காக்கை ஒரு தந்திரம் செய்தது. அஃது என்ன தந்திரம் தெரியுமா? சொல்லுகிறேன், கேளுங்கள். அந்தக் காக்கை, அருகில் இருந்த இராஜாவின் வீட்டிற்குப் பறந்து போயிற்று. அங்கே இராணி குளிக்கப் போனாள். அப்போது அவள் நகைகளைக் கழற்றி ஓர் இடத்தில் வைத்தாள். அந்த நகைகளில் ஒரு முத்து மாலையும் இருந்தது. அதுதான் நல்ல சமயம் என்று அந்தக் காக்கை நினைத்தது. உடனே அது முத்துமாலையை எடுத்துக் கொண்டு பறந்து போயிற்று.

அதை இராஜாவின் வேலைக்காரர்கள் பார்த்து விட்டார்கள். அவர்கள் முத்து மாலைக்காக காக்கையின் பின்னால் ஓடினார்கள். காக்கை அந்த முத்துமாலையைப் பாம்பின் புற்றில் கொண்டு போய்ப் போட்டது. அதை அந்த வேலைக்காரர்கள் பார்த்தார்கள். அதனால் அவர்கள் பாம்பின் புற்றை இடித்தார்கள்.

காக்கையின் முட்டைகளைத் திருட ஆரம்பித்த பாம்பு அந்தப் புற்றில் இருந்தது. அது சீறிக்கொண்டே வெளியே வந்தது. அதை இராஜாவின் வேலைக்காரர்கள் அடித்துக் கொன்று விட்டார்கள். பிறகு முத்துமாலை அவர்கள் இடம் அகப்பட்டது. அதை அவர்கள் எடுத்துக்கொண்டு போனார்கள்.

காக்கையின் முட்டைகளைத் திருட ஆரம்பித்த பாம்பு செத்துப் போயிற்று அல்லவா? ஆகை யால் நாம் ஒருவருடைய பொருளையும் திருடக் கூடாது.

"கொள்ளை விரும்பேல்"

## 12. வேலனும் இடும்பனும்

ஒரு நாள் வேலன் என்னும் ஒரு மனிதன் ஓர் ஊருக்குப் போகப் புறப்பட்டான். அதனால் அவன் போகும்போது கொஞ்சம் கட்டுச்சோறு கட்டி எடுத்துக்கொண்டு போனான். அப்போது அவன் கையில் கொஞ்சம் ரூபா இருந்தது.

வேலன் அதிக தூரம் நடந்தான். வெய் யில் அதிகமாய் இருந்தது. அப்போது அவ னுக்குப் பசி உண்டாயிற்று. வழியில் ஒரு குளம் இருந்தது. வேலன் அந்தக் குளத்தின் படிக் கட்டில் உட்கார்ந்து கட்டுச்சோறு சாப்பிடப் போனான்.

அப்போது அங்கே இடும்பன் என்னும் ஒரு மனிதன் வந்தான். அவன் வேலனைப் பார்த்து, 'ஐயா, எனக்கும் பசி அதிகமாய் இருக் கிறது' என்று சொன்னான். உடனே வேலன்

அவனுக்குப் பாதிக் கட்டுச்சோறு கொடுத்தான். இடும்பன் அதைத் திருப்தியாய்ச் சாப்பிட்டான்.

சாப்பிட்டு ஆனதும் வேலனுக்கு மிகவும் களைப்பாய் இருந்தது. அதனால், அவன் ஒரு மரத்தின் நிழலில் படுத்தான். இடும்பன் வேலன் பக்கத்தில் உட்கார்ந்தான். வேலன் அதிக தூரம் நடந்து வந்தான் அல்லவா? அதனால் அவன் நன்றாய்த் தூங்கினான். அப்போது அவன் மடியில் ரூபா இருந்தது. அதை இடும்பன் பார்த்து விட்டான்.

உடனே இடும்பனுக்குக் கெட்ட எண்ணம் உண்டாயிற்று. அவன் வேலன் மடியில் உள்ள ரூபாவைத் திருட வேண்டும் என்று நினைத்தான். அவனுடைய பசிக்கு வேலன் கட்டுச் சோறு கொடுத்ததை அவன் மறந்துபோனான்.

பிறகு இடும்பன் வேலனுடைய மடியில் இருந்த ரூபாவைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டான். வேலன் தூங்கி எழுந்ததும் ரூபாயைப் பார்த்தான். 'ஐயோ என் ரூபாவைக் காணோமே' என்று அழுதுகொண்டே போனான்.

இடும்பன் ரூபாவைத் திருடிக்கொண்டு போனான் அல்லவா? வழியில் அவன் எதிரில் திருடர்கள் வந்தார்கள். அவர்கள் இடும்பனைப் பிடித்து நன்றாய் அடித்து அவன் இடம் இருந்த ரூபாவைப் பிடுங்கிக்கொண்டார்கள்.

திருடர்கள் அடித்த அடியினுல் இடும்பன் செத்துப்போனுன். இடும்பனுக்கு வேலன் கட்டுச் சோறு கொடுத்தான் அல்லவா? அதை மறந்த இடும்பன் எப்படி ஆனுன் பார்த்தீர்களா? ஆகையால், நமக்கு ஒருவர் உதவி செய்தால் நாம் அதை மறக்கவே கூடாது. மறந்தால் சுவாமி தண்டிப்பார்.

"செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்"

# 13. அண்ணனும், தம்பியும்

தெற்கே ஓர் ஊரில் ஒரு தாசில்தார் இருந்தார். அவருக்குக் கண்ணன், இராமன் என்னும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். கண்ணனும், இராமனும் எப்போதும் சண்டை இட்டுக்கொண்டே இருப்பார்கள். ஒரு நாள்கூட அவர்கள் சமாதானமாய் இருக்கமாட்டார்கள்.

ஒரு நாள் தாசில்தார் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து இருந்தார். அப்போது கண்ணனும், இராமனும் அங்கே இருந்தார்கள். கண்ணன் இராமனை அடித்தான்; இராமன் கண்ணனைத் திட்டினுன். அதனுல் அவர்களுக்குள் சண்டை வந்தது.

தாசில்தார் அந்தப் பிள்ளைகளின் சண்டையைப் பார்த்தார். உடனே அந்தப் பிள்ளைகளைக் கூப்பிட்டார். அவர்கள் ஓடி வந்து தாசில்தாரின் இரண்டு பக்கங்களிலும் நின்றார்கள்.

தாசில்தார் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா? அவர், 'பிள்ளைகளே! நீங்கள் இரண்டு பேரும் அண்ணன் தம்பிகள் அல்லவா? அண்ணனும் தம்பியும் சண்டை இட்டுக்கொள்ளலாமா? இனி இப்படி நீங்கள் சண்டை இடக் கூடாது. நீங்கள் இரண்டுபேரும் எப்போதும் சமாதானமாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கஷ்டம் வரும். சமாதானமாய் இருந்தால் நன்மை உண்டாகும்' என்று புத்தி சொன்னார்.

பிறகு, தாசில்தார் சொன்னபடியே அந்தப் பிள்ளைகள் சமாதானமாய் இருந்தார்கள். ஒரு நாள்கூட அவர்கள் சண்டை இடவில்லை. தகப்பனார் சொன்ன புத்தியை அவர்கள் மறக்காமல் இருந்தார்கள்.

அதனால் அவர்களுக்கு நன்மை உண்டாயிற்று. ஆகையால் நாமும் நம் அண்ணன் தம்பிகளோடு சண்டை செய்யாமல் இருந்தால் நமக்கும் நன்மை உண்டாகும்.

"உத்தமனா யிரு"

# 14. தருமன்

ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் தருமன். அவன் மிகவும் நல்லவன். ஆனால், அவனுடைய சிநேகிதர்கள் எல்லாரும் திருடுவார்கள் ; பொய் பேசுவார்கள்.

அந்தச் சமாசாரம் ஒரு பெரியவருக்குத் தெரிந்தது. அவர் தருமனைப் பார்த்து, 'அப்பா, நீ மிகவும் நல்லவனாய் இருக்கிறாய்! உன் சிநேகிதர்கள் எல்லாரும் திருடர்கள் ஆயிற்றே! நீ அந்தத் திருடர்கள் இடம் சிநேகமாய் இருக்கலாமா? இனிமேல் அவர்கள் இடம் போகாதே. அவர்கள் சிநேகத்தை விட்டுவிடு' என்று புத்தி சொன்னார்.

ஆனால், தருமன் அந்தப் பெரியவர் பேச்சைக் கேட்டானா? இல்லை. அவனுடைய சிநேகிதர்கள் எல்லாரும் திருடர்கள் என்று அவனுக்கும் தெரியும். தெரிந்தும், அவன் அவர்களோடு சேர்ந்துகொண்டுதான் இருந்தான்.

ஒரு நாள் தருமனுடைய திருட்டுச் சிநேகிதர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவர்கள் ஒரு வீட்டில் நுழைந்து கொஞ்சம் பணம் திருடினார்கள் ; அதை எடுத்துக்கொண்டு தருமனுடைய வீட்டுக்கு ஓடினார்கள்.

அந்தச் சமாசாரம் ஒரு போலீஸ்காரனுக்குத் தெரிந்தது. உடனே அவன் தருமனுடைய வீட்டுக்குப் போனான். அங்கே அந்தத் திருடர்கள் இருந்தார்கள். அவர்களை அந்தப் போலீஸ்காரன் பிடித்துக்கொண்டான். அப்போது அங்கே தருமனும் இருந்தான். அவனும் ஒரு திருடன்தான் என்று அந்தப் போலீஸ்காரன் நினைத்தான். அதனால் தருமனையும் திருடர்களோடு சேர்த்து அந்தப் போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போனான்.



தருமன் திருடர்களோடு சேர்ந்து இருந்தபடியால் அல்லவா அவனுக்கு ஆபத்து வந்தது? ஆகையால் நல்ல பிள்ளைகள் திருட்டுப் பிள்ளைகளோடு சேரக் கூடாது. சேர்ந்தால் கஷ்டம் உண்டாகும்.

"நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்"

# 15. வேடனும் நாயும்

ஒரு காட்டில் வேடன் ஒருவன் ஒரு குடிசையில் இருந்தான். அவனுக்கு ஒரு குழந்தை இருந்தது. அந்த வேடன் ஒரு நாய் வளர்த்தான்; அந்த நாய் மிகவும் நல்ல நாய்.

ஒரு நாள் வேடனுடைய குழந்தை தூங்கிக்கொண்டு இருந்தது. வேடன் குழந்தைக்கு நாயைக் காவல் வைத்துவிட்டு வெளியே போனான்.

கொஞ்சம் நேரம் ஆயிற்று. அந்தக் குழந்தையைக் கடித்துத் தின்ன அங்கே ஒரு குள்ளநரி வந்தது. அதை அங்கே இருந்த நாய் பார்த்துவிட்டது. உடனே அந்த நாய் என்ன செய்தது தெரியுமா ?

அந்த நாய் குள்ளநரியின் மேல் பாய்ந்து அதைக் கடித்துக் கொன்றுவிட்டது. அதனால் அந்த நாயின் வாய் இரத்தமாய் இருந்தது.

குழந்தையைத் தின்ன குள்ளநரி வந்தது அல்லவா ? அந்தக் குள்ளநரியைக் கொன்று விட்டதால் அந்த நாய்க்குச் சந்தோஷம் உண்டாயிற்று. அந்த நாய், குடிசைக்கு வெளியே போய் வேடன் வருகிறானா என்று பார்த்தது.

அப்போது வேடன் வந்தான். அவன் நாயின் வாயில் இரத்தம் ஒழுகிக்கொண்டு இருப்பதைப் பார்த்தான். அதனால் அந்த வேடன் குழந்தையைத்தான் நாய் கடித்து கொன்றுவிட்டது என்று நினைத்தான். அதற்குமேல் அவன் ஒரு யோசனையும் செய்யவே இல்லை. அவனுக்குக் கோபம் அதிகமாய் வந்தது. அதனால் அவன், கையில் இருந்த ஒரு தடியினால் நாயின் மண்டையில் ஓங்கி அடித்தான். ஐயோ பாவம்! நல்ல நாய் செத்துப்போய்விட்டது.

பிறகு அந்த வேடன் குடிசையின் உள்ளே போனான். அங்கே அவனுடைய குழந்தை நன்றாய்த் தூங்கிக்கொண்டு இருந்தது. அதை அவன் பார்த்தான். செத்துப்போன குள்ளநரியும் ஒரு மூலையில் கிடந்தது. அதையும் அவன் கண்டான். அப்போதுதான் அவனுக்கு எல்லாம் தெரிந்தது.

அப்போது அவன் 'ஐயோ, நான் யோசனை செய்யாமல் என்னுடைய நல்ல நாயைக் கொன்று விட்டேனே!' என்று சொன்னான்.

ஆகையால், நாம் யோசனை செய்யாமல் எதையும் செய்யக் கூடாது.

"கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்"

# 16. அகங்காரம் உள்ள அரசன்

ஓர் ஊரில் ஒரு பிராமணர் இருந்தார். அவர் வேதங்களை நன்றாய்ப் படித்தவர். சுவாமி இடத்தில் அவருக்கு அதிக அன்பு உண்டு. அதனால் அவர், ஒவ்வொரு நாளும் பூமாலை கட்டிக்கொண்டு போய்க் கோயிலில் கொடுப்பார்.

ஒருநாள் அந்தப் பிராமணர் ஒரு பூமாலை கட்டி எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போனார். அப்போது அந்த ஊர் அரசன் ஒரு யானையின் மேல் ஏறி எதிரே வந்தான். அந்த யானை, கொஞ்சம் கெட்ட குணம் உள்ளது. அதனால் அஃது அந்தப் பிராமணர் கையில் இருந்த பூமாலையைப் பிடுங்கிக் கீழே போட்டுக் காலால் தேய்த்து விட்டது.

அப்போது அப் பிராமணர் அரசனைப் பார்த்து, 'ஓ அரசனே! உன்னுடைய யானை செய்த காரியத்தைப் பார்த்தாயா?' என்று கேட்டார்.

அதற்கு அந்த அரசன், 'ஓய் பிராமணா! என்னுடைய யானை உம்மை என்ன செய்தது? நீர் அந்தப் பூமாலையை யானைக்குக் காட்டாமல் ஏன் கொண்டுபோகக் கூடாது? நீர் என்ன பெரிய மனிதரோ? உமக்குக் கொஞ்சம்கூடப் புத்தி இல்லையே!' என்று கேவலமாகப் பேசினான்.

அதைக் கேட்டதும் அந்தப் பிராமணருக்குக் கோபம் வந்தது. அவர் அந்த அரசனைப் பார்த்து, 'ஓ அரசனே! நீ ஓர் அரசனா! நான்



அந்தப் பூமாலையைச் சுவாமிக்குக் கொண்டு வந்தேன். உன்னுடைய யானை அதைப் பிடுங்கிக் கசக்கிவிட்டது. அதை நான் உனக்குச் சொன்

னேன். நீ மிகவும் கெட்டவன். உன் யானைக்கும் உனக்கும் சீக்கிரம் கேடு வரும்' என்று சொல்லி விட்டுப் போனார்.

அவர் சொன்னபடியே கொஞ்சம் நாளில் அரசனுடைய யானை செத்துப்போயிற்று. அந்த அரசனுக்கும் ஒரு வியாதி வந்தது. அதனால் அவன் மிகவும் கஷ்டப்பட்டான்.

ஆகையால், படித்தவர்களைக் கேவலமாகப் பேசக் கூடாது. பேசினால் தப்பாமல் கஷ்டம் வரும். படித்தவர்கள் இடம் எப்போதும் மரியாதையாய் இருக்கவேண்டும்.

"கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்"

முற்றிற்று

Printed at the 'Caxton Press,' Madras — 1935. (G)

# சிறுவர்களுக்கான கதைகள்

## பக்த சிரோமணிகள் சரித்திரச் சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| திருநாவுக்கரசர் ... ... ... | 0 | 1 | 0 |
| சுந்தரமூர்த்திகள் ... ... ... | 0 | 1 | 0 |
| தாயுமானவர் ... ... ... | 0 | 1 | 0 |
| இராமானுஜர் ... ... ... | 0 | 1 | 0 |
| சம்பந்தர் ... ... ... ... | 0 | 2 | 0 |
| மாணிக்கவாசகர் ... ... ... | 0 | 2 | 0 |
| திருமங்கை மன்னன் ... ... ... | 0 | 2 | 0 |
| தொண்டரடிப்பொடி ஆழ்வார் ... ... | 0 | 2 | 0 |
| நம்மாழ்வார் ... ... ... ... | 0 | 2 | 0 |
| குலசேகராழ்வார் ... ... ... | 0 | 2 | 0 |
| ஸ்ரீமந் நாதமுனிகள் ... ... ... | 0 | 2 | 0 |
| மார்க்கண்டேயர் ... ... ... | 0 | 2 | 6 |
| திருவெண்காடர் ... ... ... | 0 | 4 | 0 |
| நந்தனார் ... ... ... ... | 0 | 4 | 0 |
| ஆதிசங்கராசாரியார் ... ... ... | 0 | 4 | 0 |
| துருவ ப்ரஹ்லாதர் ... ... ... | 0 | 4 | 0 |

## பாரதக் கதைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. துருவாஸரும், துரியோதனனும் ... | 0 | 1 | 0 |
| 2. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை ... ... | 0 | 1 | 6 |
| 3. பாண்டவர் சூது ... ... ... | 0 | 2 | 6 |
| 4. யுதிஷ்டிர ராஜஸூயம் ... ... | 0 | 3 | 0 |
| 5. பாண்டவர் ஆற்றலும், பாஞ்சாலியின் மணமும் | 0 | 4 | 0 |

**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,**

புத்தக வியாபாரிகள்,

27, சின்னத்தம்பித் தெரு, **சென்னை.**